**தலைப்பு 162 – மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமையமாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் அடங்கிய பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் அமைச்சிக்குரிய வருடாந்தவிரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன்27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்வினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான எனது பொறுப்புக்கள்,கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சுக்கு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(i)** | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குகள் பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின்படி பிற பெறுவனவுகள் ரூபா 3,276,629,370 ஆக இருந்ததுடன் நிதிச் செயலாற்றுகைக் கூற்றின்படி ரூபா3,328,349,086 ஆக இருந்தமையினால் ரூபா51,719,716 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்குகள் பொழிப்பு மற்றும் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதியை ஒப்பிட்டு சரியான பெறுமதியைக் காட்டுதல் வேண்டும். | இந்நிலமையை சரிசெய்து கொள்வதற்கு பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடப்படும். |
| **(ii)** | நிதிச் செயலாற்றுகைக் கூற்றின்படி கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா7,466,002,315 ஆக இருந்ததுடன் அம்மீதியை | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின்படி செயலாற்றுதல் வேண்டும் என. | -அதே - |

அமைச்சின் கட்டுநிதிக் கணக்கு மீதியுடன் ஒப்பிடுவதற்காக கட்டுநிதி சீராக்கல் கணக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)**நிதி நிலைமைக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(i)** | வேலை முற்பணக் கணக்கு | | |
| | அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற நிருமாணிப்புக்கள் பொருட்டு பாரிய தொகை செலவிடப்பட்டிருந்தும், அச்செலவினை நிதி நிலைமைக் கூற்றில் நடைபெறும் வேலை கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2018நவம்பர் 21 ஆம் திகதிய267/2018 ஆம் இலக்கஅரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் நடைபெறும் வேலை பதியப்படுதல் வேண்டும். | 2018திசெம்பர் 31 ஆம் திகதிக்கு வாடகை வேலை முற்பணக் கணக்கின் விபரங்கள் தயாரிக்கப் பட்டிருந்ததுடன், அத்தகவல்களை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றேன். |
| **(ii)** | பிற நிறுவனத்துக்குச் சொந்தமான ரூபா 2,000,000 பெறுமதியான வாகனமொன்று அமைச்சிற்கு சொந்தமானவாகனமொன்றாக நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் கீழ் காட்டப்பட்டிருந்தது. | வாகனம் உரித்துமாற்றிப் பெற்றதன் பிற்பாடு நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரித்துமாற்றிப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

**(இ)** காசுப்பாய்ச்சல் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(i)** | காசுப்பாய்ச்சல் கூற்றின்படி வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா24,886,789,229 ஆக காட்டப்பட்டிருந்ததும் மாதாந்த கணக்குகள் பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின்படி அது ரூபா24,825,917,877 ஆக | 2018நவம்பர் 21 ஆம் திகதிய267/2018 ஆம் இலக்கஅரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது.அதற்கிணங்க,செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வு ரூபா60,871,352 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | | |
| **(ii)** | மாதாந்த கணக்குகள் பொழிப்பு பிரகாரம் காசுப் பாய்வில் செயற்பாட்டு நடவடிக்கைகள் பொருட்டு செலவிடப்பட்ட காசுப் பாய்வு ரூபா 24,817,822,831ஆக இருந்தபோதிலும் அது,காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 705,048,186ஆக காட்டப்பட்டிருந்தது.அதன்படி, அச்செலவு ரூபா24,112,774,645ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | -அதே - | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை |
| **(iii)** | காசுப்பாய்ச்சல் கூற்றின்படி அரச அலுவலர்களின் முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 7,344,892 ஆன கடன் தவணைப்பணங்கள் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வொன்றாக காட்டப்பட்டிருக்கவில்லை. | -அதே - | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| **(iv)** | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகள் பொருட்டு செலவிடப்பட்ட காசுப் பாய்வு ரூபா 31,416,272,152 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் அது,மாதாந்த கணக்குகள் பொழிப்பு பிரகாரம் ரூபா15,439,940ஆக இருந்தமையினால் முதலீட்டு நடவடிக்கைகள் பொருட்டு செலவிடப்பட்ட காசுப் பாய்வு ரூபா 31,400,832,212 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | -அதே - | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| **(V)** | அமைச்சு நிதி நடவடிக்கைகளில் ஈடுபட்டிராத போதிலும்,அதன் கீழ் ரூபா231,471,206 செலவொன்று குறிப்பிடப்பட்டிருந்தது. | -அதே - | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு சோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி ரூ. | இணங்காமை | | |
| (அ) | செயலாளர்களின் பிரமாணக் குறிப்பின் ஆ அட்டவணையின் பந்தி 03 | 3,676,038 | செயலாளர்களின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சரவை அங்கீகாரமின்றி அமைச்சு செயலாளருக்கு மத்திய பொறியியல் உசாவலர் பணியகத்திலிருந்து சம்பளம் மற்றும் அந்நிறுவனத்துக்கு மட்டும் ஏற்புடையதாக செயலாளருக்கு உரித்தற்ற ஊக்குவிப்புப் படி, பொறியியல் படி, தொழில் படி, வெளி மருத்துவ சிகிச்சை படி மற்றும் இலாப அடிப்படையில் செலுத்தப்படுகின்ற உற்பத்தித்திறன் படி என்பன 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக,செயலாளருக்கு உரித்தான சகல படிகளும் அமைச்சிலிருந்து பெறப்பட்டிருந்தன. | அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் சம்பளம் வழங்கும்போது செயலாளர்களின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகள் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | செயலாளர் ஒருவரை நியமிக்கும் அதிகாரி என்ற வகையில் சனாதிபதி செயலகத்திலிருந்து எழுத்துமூலமாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் மத்திய பொறியியல் உசாவலர் பணியகத்திலிருந்து எனக்கு வழங்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகள் மீள்நிரப்பல் செய்யப்பட்டன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் | 47,892,254 | 06 மாதங்கள் கடந்தவழங்கப்பட்டதெனினும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 14 | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். | தற்போது உரிய சீராக்கங்கள் செய்யப்பட்டு சரிசெய்யப்பட்டுள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிதி ஒழுங்குவிதிக் கோவையின் 396(ஈ)ஆம் நிதி ஒழுங்குவிதி | | காசோலைகள் மற்றும் செயற்றிட்டத்துக்குரிய 32 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் செயலாற்றியிருக்கவில்லை. | | ளன. |
| (இ) i) | 2016 மார்ச் 24 ஆம் திகதிய1/2016ஆம் இலக்கமுகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 2.2.4பந்தி | 726,212 | தந்திரோபாய நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் 5 பதவிகள் பொருட்டு பகுதிநேர அடிப்படையில் அரச சேவையின் 5 அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படாமல் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டு பொருட்டு ரூபா 726,212படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். | பகுதிநேர அடிப்படையில் அமைச்சுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள அலுவலர்கள்,முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்ற வாய்மூல அறிவுறுத்தல்களுக்கிணங்க செயலாளரின் பூரண அங்கீகாரத்தின் பேரில் செயற்றிட்டத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். |
| II | 9.3 பந்தி | | கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின், செயற்றிட்ட ஒழுங்குபடுத்தற் குழுக் கூட்டங்கள் இரு மாதங்களுக்கொரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும்,02 செயற்றிட்ட ஒழுங்குபடுத்தற் குழுக் கூட்டங்கள் மாத்திரமே , மீளாய்வாண்டினுள் நடாத்தப்பட்டிருந்தன. | செயற்றிட்ட ஒழுங்குபடுத்தற் குழுக் கூட்டங்கள் இரு மாதங்களுக்கொரு முறை நடாத்தப்படல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.3 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| முன்னாள் மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி),கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் வாகனமொன்று 2015 ஒக்டோபர் முதல்2016 மே வரையில் முழுமையாக இணைக்கப்பட்டிருந்தும், கடமைகள் பொருட்டு தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்துவதாக தெரிவித்து ரூபா 340,000பெறப்பட்டிருந்தது. அதில் ரூபா 150,000 செலுத்தப்பட்டிருப்பினும் ரூபா190,000இதுவரையில் செலுத்தப்பட்டிருக்கவில்லை | பெற்றுக்கொள்ளப்பட்ட பிரயாண படியை மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய அலுவலர் குறித்த தவறினை ஏற்றுக்கொண்டு உரிய தொகையில் ஒரு பகுதியை மட்டும் செலுத்தியிருப்பதுடன், எஞ்சிய ரூபா 190,000 தொகையை செலுத்துவதை தவறுகை செய்துள்ளார். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டில் 53 செலவு விடயங்கள் பொருட்டு ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்திய பின்னரான மீதி, ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் நூற்றுக்கு 10 முதல் நூற்றுக்கு 100வரையான வீச்சில் சதவீதமாக இருந்தது. | நிதி ஒழுங்குவிதி50 பிரகாரம் செலவுமதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும் என. | ஆண்டிறுதி பொறுப்புக்களின் பெறுமதி ஒவ்வொரு செலவு விடயத்திலுமுள்ள மீதிகளிலிருந்து குறைக்கும்போது குறிப்பிடத்தக்க சேமிப்பு சதவீதம் காணப்படாமையினால் அவதானிப்புகளுடன் இணங்க முடியாது. |
| (ஆ) | 08அபிவிருத்தி | குறைநிரப்பு மதிப்பீட்டினை | |

| | | |
|---|---|---|
| உபசெயற்றிட்டங்கள் பொருட்டு குறைநிரப்பு மதிப்பீட்டின்மூலம் ரூபா8,736,000,000 நிதியேற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னர் ரூபா 6,747,882,946 எஞ்சியிருந்தது. அதன் சதவீதம் நூற்றுக்கு 31 முதல் நூற்றுக்கு 100 வரையான வீச்சில் இருந்தது. | ஒதுக்குவதன்மூலம் நிதியினை ஏற்படுத்திக் கொள்வதில்சரியானதும் தர்க்கரீதியான மதிப்பீட்டினை தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என. | - -அதே - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------

### 3.1 பணிகள் நிறைவேற்றப்படாமை

------------------------------------------

வருடாந்த செயல் திட்டத்தின்படி 2018 ஆம் ஆண்டில் அமைச்சினால் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பின்வரும் பணிகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனஅவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நவீன நிலைபேறான அபிவிருத்தி நகர நிலையங்களை விருத்திசெய்யும் செயற்றிட்டத்தின் கீழான உபசெயற்றிட்டமான கடவத்தை வீதி, களுபோவில மற்றும் நீர்வடியும் பாதையை நீடித்தலும் திருத்துதலும், ஹொரண பஸ்தரிப்பிடத்தை நிருமாணித்தல் -அவத்தை 5 மற்றும் கிரிந்திவெல பஸ்தரிப்பிடத்தை நிருமாணித்தல் -அவத்தை 5 என்பன பொருட்டு முறையே ரூபா 6 மில்லியன்,ரூபா 10.5 மில்லியன் மற்றும் ரூபா 05 மில்லியன் என நிதி ஏற்பாடு செய்திருந்தும் குறித்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்றிட்டத்தை உடனடியாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காமை மற்றும் நீர்க்குழாய் முறைமை மற்றும் மின்சார முறைமை நிறுவுவதில் தாமதம்,வரைபடங்கள் பொருட்டு பிரதேச சபையின் அங்கீகாரம் கிடைக்காமை என்பன காரணங்களாகின. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 09 மாகாணங்களினுள் நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் ஹசலக பஸ்தரிப்பிடம் அபிவிருத்தி, தமிழ் பிள்ளைகளின் தடுப்பு இல்லத்தை நிருமாணித்தல்-றக்வான -அவத்தை 2, எல்ல வசதிகள் நிலையத்தை விருத்திசெய்தல்,வெல்லவாய சந்தை அபிவிருத்தி,இரத்மலானை பெலக்கடை சந்தை அபிவிருத்தி, கஸ்பாவ பிரதேச செயலகத்தின் பாதைகளை விருத்திசெய்தல், மட்டக்களி காக்கை தீவு கரையோர பூங்காஉற்சவ மண்டபம் அமைத்தல் என்பன பொருட்டு முறையே ரூபா 20 மில்லியன்,ரூபா 22 மில்லியன்,ரூபா 40 மில்லியன்,ரூபா 60 மில்லியன்,ரூபா 60 மில்லியன்,ரூபா 15 மில்லியன் மற்றும் ரூபா 150 மில்லியன் என நிதி ஏற்பாடு செய்திருந்தும் குறித்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்றிட்டத்தை உடனடியாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | நிறைவேற்றப்படவில்லை. |

## 3.2 எதிர்பார்த்த வெளியீடுகள் மட்டத்தை அடையாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மேல் வலய சமுத்திர நகர அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு 2017 மற்றும்2018 ஆண்டுகளில் ரூபா 44.27 மில்லியன் செலவிடப்பட்டிருந்தும் சாத்தியவள ஆய்வு அல்லது கரையோரத்துக்கு ஏற்படும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்ளாது செயற்றிட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. செயற்றிட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டிருந்த துறைமுகம் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் வெலிசர கடற்படை முகாம் சார்ந்த வழங்கல் சேவை நிலையமொன்றை தாபித்தல் போன்ற பாகங்கள் கைவிடப்பட்டிருந்தன. | செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்கு முன் சாத்தியவள ஆய்வு அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றதன் பிற்பாடு செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும் என. | இங்கு சாத்தியவள ஆய்வு நடவடிக்கைகள் NARA நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் கிம்புலா அருவி (புளுமண்டல்) பிரதேசத்தை அபிவிருத்திசெய்யும் பணி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட நகர அபிவிருத்தி திட்டங்கள் 2030 புதிய அடிப்படை திட்ட வலயத்திற்கேற்ப திருத்தப்பட்டுள்ளன. |
| (ஆ) | வான் நகர அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு 2017 மற்றும்2018 ஆண்டுகளில் ரூபா 75 மில்லியன் செலவிடப்பட்டிருந்தும் சாத்தியவள ஆய்வு மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிச்சயமான அபிவிருத்தி பணிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | -அதே - | இந்த செயற்றிட்டத்தை திட்டமிடுவதற்கு 2017 ஆம்ஆண்டில் கொரியாவின் காணி உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சு பொறுப்பேற்ற போதிலும் அதனை செயற்படுத்துவதற்கு கொரியா அமைச்சுக்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | புறக்கோட்டை மெனிங் சந்தை மீளதாபிக்கும் செயற்றிட்டத்தின் முதலாம் அவத்தையின் கீழ் காணியை நிரப்புதல் மற்றும் வடிகால் முறைமை அமைத்தல் பொருட்டு ரூபா 415,072,322 ஒப்பந்தத்துக்கு கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 08 மாதங்கள் தாமதமாகி உரிய பணிகள் முடிக்கப்பட்டு கால்வாய் முறைமையை அமைப்பதற்காக ரூபா 114,520,000 நிதி ஏற்பாடு செய்திருந்தும் குறித்த பணி நிறுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாக நிலங்களை அபிவிருத்தி செய்வதற்காகவும் மேலதிக நிரப்பலுக்காகவும் ரூபா 65,529,402 மேலதிக செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச்செயற்றிட்டத்தின் இரண்டாம் அவத்தையான தூண்களை இடும் பணி ரூபா 484,378,4552 பெறுமதியில் தனிப்பட்ட நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் ஒப்பந்தம்செய்த நாட்களை விட20 நாட்கள் தாமதமாகி பணியை முடித்ததன்மேல் ஒப்பந்த நிபந்தனைகளின்படி ரூபா 7,000,000 ஆன தாமதக் கட்டணத்தை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்றிட்டத்தை செயற்படுத்தும்போதும் கொடுப்பனவு செய்யும்போதும் ஒப்பந்தம் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும் என. | அப்போது நிலவிய மண் வழங்கலின் பற்றாக்குறை மற்றும் பொறியியல் ரீதியான அறிவுறுத்தலின் பேரில் நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2016 திசெம்பர் 15 ஆம் திகதி வரையில் காலம் நீடிக்கப்பட்டிருந்தமையினால் ஒப்பந்தம் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய 15 நாட்கள் பொருட்டு தாமதக் கட்டணமாக ரூபா 3,333,625 அறவிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | ஒப்பந்த பெறுமதி ரூபா240.84 மில்லியன் (ஐ.அ.டொலர் 1.52 மில்லியன்) ஆன துனுமடலாவ நீர் சுத்திகரிப்பு செயற்றிட்டத்தின்(Rehabilitation of Dunumadalawa Water Treatment Plant) புனரமைப்பு நடவடிக்கைகள் 2017 செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி முடிவடைவதற்கு இருந்தபோதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையில் அதன் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 90 மாத்திரம் | தாமத காலம் பொருட்டு ஒப்பந்தகாரர்களிடமிருந்து தாமதக் கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆகவிருந்தது.தாமதக் கட்டணத்தை (LD)ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு செயற்றிட்டம் தவறியிருந்தது. | | |
| (உ) | ஒப்பந்த பெறுமதி ரூபா 24.22மில்லியன் (ஐ.அ.டொலர் 0.16 மில்லியன்) ஆன ஆதர் சீட் காட்சிகாண் மேடை (Rehabilitation of Arthur's seat viewing deck) நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருப்பினும் அவ்விடத்துக்கு மின் வசதி வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பொருத்தப்பட்டிருந்த மின்மாணி உபகரணங்கள் உடைக்கப்பட்டிருந்தன என இட சோதனையின்போது அவதானிக்கப்பட்டது. | இச்செயற்றிட்டத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்தி உதிதேச பணி பொருட்டு பயன்படுத்துவதற்குநட வடிக்கை எடுத்தல் வேண்டும் என. | ஆதர் சீட் காட்சிகாண் நிலையத்தின் முதலாவது பாகத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக கண்டி மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மின் வசதி வழங்கல் இரண்டாம் அவத்தையின் கீழ் மேற்கொள்ளுதல் வேண்டும் என. |

## 3.3 எதிர்பார்த்த பிரதிபலன்கள்(Outcome) கிடைக்காமை.

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும்2018 ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்ட ரூபா678.1மில்லியன் ஆன 15 செயற்றிட்டங்கள் உரிய தரப்பினர்களுக்கு ஒப்படைக்காத காரணத்தினால் எதிர்பார்த்த பிரதிபலன்களை பெற முடியாதிருந்தது. | வேலைகள் முடிவுறுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் உரிய தரப்பினர்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இச்செயற்றிட்டங்கள் பல்வேறு காரணங்களின் மேல் ஒப்படைப்பதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) | கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் நிருமாணிக்கப்பட்ட பெத்தகான உயிர் பல்வகைமை பூங்காவின் நடவடிக்கைகள் உரிய நியமத்துக்கு மற்றும் உரியவாறு நிருமாணிப்பு வேலைகளை மேற்கொள்ளாதிருந்தும்,ரூபா92.07 மில்லியன் ஒப்பந்த நிறுவனத்துக்கு செலுத்தப்பட்டிருந்தது. | உயிர் பல்வகைமை பூங்காவின் நடவடிக்கைகள் உரிய நியமத்துக்கு மற்றும் உரியவாறு நிருமாணிப்பு வேலைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,296,530 தொகையை மீண்டும் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மட்டக்களி காக்கை தீவு கரையோர பூங்காவை அமைப்பதற்காக ரூபா 275.78 மில்லியன் ஒப்பந்த தொகைக்கு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின்படி 10 மாத காலத்தினுள் ஒப்பந்த வேலைகளை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும், கரையோர பூங்கா நிருமாணிப்புகளை முடிவுறுத்துவதற்கு 01 ½வருடங்களுக்கு மேல் காலம் சென்றிருந்தது. சில விடயங்கள் உரிய பொறியியல் திட்டத்தின்படி உரிய நியமங்களுக்கேற்ப நிருமாணிப்பு வேலைகளை மேற்கொள்ளாமையினால் கரையோர பூங்கா நிருமாணிப்புகளில் 47 குறைபாடுகள் இருந்தும் பூங்கா பொறுப்பேற்கப்பட்டது.<br>அச்சந்தர்ப்பத்தில் குறைபாடுகள் பற்றி கருத்திலெடுக்காது ரூபா 129.14 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கரையோர பூங்கா நிருமாணிப்புகளின் குறைபாடுகளைஒப்பந்த நிறுவனத்தைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | காலத்தை நீடித்தலை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்றிட்டங்களை நிறைவேற்றுகையில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | டொரிங்டன் மற்றும் மோதற சுரங்க திட்டமிடல் மற்றும் நிருமாண செயற்றிட்டம் 32,098,189 ஐ.அ.டொலர்களுக்கு சீன கம்பனியொன்றுடன் 2018 மே30 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 02 ஆண்டுகளில் முடிவுறுத்த வேண்டியபோதிலும் திட்டமிடப்பட்ட பணிகள் 2018 திசெம்பர்31ஆம் திகதி வரையிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.<br>அத்துடன், நிருமாணப் பணிகள் அல்லது பிரதான உபகரணங்களை இடப்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 11 முதல் 71 வரையான நாட்கள் தாமதம் உள்ளமையினால் செயற்றிட்டத்தை விரைவாக முடிவுறுத்த வேண்டும். | அவதானிப்புகளுடன் இணங்க முடியாது. |
| (ஆ) | செயற்றிட்டத்தின் ஆலோசகரினால்2018 திசெம்பர்31ஆம் திகதிக்கு | செயற்றிட்டத்தின் உண்மையான செயலாற்றல் பிரகாரம் | பதில் வழங்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையின்படி வடிவமைப்புக்களின் (Designing) செயலாற்றல் நூற்றுக்கு 50 என காட்டப்பட்டிருப்பினும்,வடிவமைப்பு நிலமையை காட்டும் அறிக்கை(Designing Status Report) பிரகாரம், மொத்த 102 வடிவமைப்புக்களில் 03 வடிவமைப்புக்கள் மட்டும் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன், மிகவும் குறைந்த செயலாற்றல் காணப்படுகையில் மீளாய்வாண்டு இறுதியளவில் 333,564ஐ.அ.டொலர் அதாவது நூற்றுக்கு 34 போன்ற உயர் பெறுமதி செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | . |

**3.5 வெளிநாட்டு உதவி செயற்றிட்டங்கள்**

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | ------------------------------ | ---------------------- | ---------------- |
| (அ) | **கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்றிட்டம்**<br>**-----------------------------------------------------** | | |
| **(i)** | பேரே குளம் வரிசை பூங்கா நிருமாணம் அவத்தை Iகீழ் வெள்ளம் மற்றும் நீர்வள முகாமைத்துவ முறைமையொன்றை(RTC) உருவாக்கும் முகமாக மதிப்பீடுசெய்யப்பட்ட ரூபா 390மில்லியன் தொகையில் ரூபா105.5 மில்லியன்2018 திசெம்பர்31ஆம் திகதியளவில் செலவிடப்பட்டிருந்ததுடன், திறைசேரியின் விசேட அங்கீகாரமின்றி அத்துடன் 2016 மார்ச்24ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக உரிய பிரிவின் ஆலோசகர் பொருட்டு மாதமொன்றுக்கு ரூபா 920,000 வீதம்2018 ஆம் ஆண்டிறுதியளவில் ரூபா 24,740,000 மொத்த ஊதியம் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், செயலாற்றல் மதிப்பீடு இன்றி இந்த அலுவலரின் சேவைக்காலம் 3 வருடங்களினால் நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2019 மே மாதம் இறுதி வரையிலேனும் இந்த உப செயற்றிட்டத்தின் அலுவல்களை கொண்டுநடாத்துவதற்காக நிரந்தர | ஊதியம் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி இந்தப் பிரிவில் சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன் இலவசமாக பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பதவியினரை பயிற்றுவிப்பதற்கும் இணைப்பதற்கும் தேவையான நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ii)** | வெட்டுமர வேலைகள் பொருட்டு ரூபா 9,683,132 செலுத்தப்பட்டிருப்பினும் அதற்காக(Wood Works) வெட்டுமர சோதனை அறிக்கைகள்(Timber Test Reports)சமர்ப்பிக்கப்படாமையினால் வெட்டுமர நிருமாணங்களின் தரம் தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. வெட்டுமர வேலைகள் பொருட்டு ரூபா 1,805,832 செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான உரிய வெட்டுமர சோதனை அறிக்கைகளை பெற்றுக் கொள்ளாமையினால் மீண்டும் அத்தொகைகளை குறைத்துக் கொண்டு பணம் செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | வெட்டுமர சோதனை அறிக்கைகளை(Timbe r Test Reports) பெற்றுக் கொண்டு குறித்த வெட்டுமர நிருமாணங்களின் தரம் தொடர்பில் திருப்தி அடைந்ததன் பிற்பாடு கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவி ல்லை. |
| **(iii)** | ஒப்பந்தத்தின் நிபந்தனை இலக்கம்14.6 பிரகாரம் பட்டியல்களுக்குரிய சகல தகவல்களும் மூல ஆவணங்களும் கிடைத்ததன் பின்னர் ஆலோசகர் பட்டியல்களை அங்கீகரித்திருத்தல் வேண்டும். குறித்த நிபந்தனைக்கு முரணாக 3 நிருமாணிப்பு விடயங்கள் பொருட்டு ரூபா 4,182,845 ஆணைச்சீட்டு பற்றி கருத்திற்கொள்ளாது ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஒப்பந்தத்தின் நிபந்தனை இலக்கம்14.6 பிரகாரம் பட்டியல்களுக்குரிய சகல தகவல்களும் மூல ஆவணங்களும் கிடைத்ததன் பின்னர் ஆலோசகர் பட்டியல்களை அங்கீகரித்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவி ல்லை. |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ---------------------- | -------------------------- |
| (அ) | மீளாய்வாண்டுஇறுதியளவில்தந்தி ரோபாய நகர அபிவிருத்தி செயற்றிட்ட வேலைகள் பராமரிப்பு பொருட்டு ரூபா 278.67 மில்லியன் பெறுமதியான பொறிகள், உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கண்டி, காலி நகர சபைகளுக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் | குறித்த நிறுவனங்களுக்குத் தேவையான பொறிகள், உபகரணங்களை இனங்கண்டு அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யாது நிறுவனங்களின் | கண்டி மாநகர சபைக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் வழங்கப்பட்டிருந்த இயந்திரங்கள் தொடர்பில் பதிவேட்டு மற்றும் இருப்பு புத்தகங்களில் பதியப்பட்டுள்ளது எனவும் பராமரிப்பு நிவாரண நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருப்பினும் அவை செயற்பாடின்றி காணப்படுவதாக கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.அத்துடன்,குறித்த பொறிகள், உபகரணங்கள் செயற்றிட்ட வேலைகளுக்காக பயன்படுத்துவதா என்பதுபற்றி செயற்றிட்டம் உரிய மேற்பார்வை செய்திருக்கவில்லை. | தேவைப்பாட்டுக்கு மாறாக பொறிகள், உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தலாகாது. | மேற்கொண்டு மிகவும் பயனுள்ள விதத்தில் குறித்த உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன எனவும் கண்டி மாநகர சபையும் நீர்ப்பாசனத் திணைக்களமும் தெரிவித்துள்ளன. |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் தந்திரோபாய நகர அபிவிருத்தி செயற்றிட்டம் கொள்வனவுசெய்த ரூபா120.59 மில்லியன் (ஐ.அ.டொலர் 0.85மில்லியன்) பெறுமதியானDI மற்றும்PEகுழாய்கள் மற்றும் துணைகருவிகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் குறித்த இருப்புகளுக்கு ஏற்புடைய இருப்பு அறிக்கைகள் செயற்றிட்டத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. இந்த இருப்பு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை பொறுப்பில் இருந்ததுடன், இருப்புகளுக்கு ஏற்புடைய பண்ட கணிப்பாய்வும் செயற்றிட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்றிட்டம் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட துணைகருவிகள் தொடர்பில் உரிய பராமரிப்பினை மேற்கொள்ளுதல் அத்துடன் உரிய இருப்பு தொடர்பில் பண்ட கணிப்பாய்வுகள் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | இந்த குழாய்கள் மற்றும் துணைகருவிகளை, வீதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுகையில் அவை கண்டி மாநகர சபைக்கும் நீர் வழங்கல் சபைக்கும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

## 3.7 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2016 யூன் மாதம் ரூபா 1,614,963,362 க்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட கட்டுகஸ்தொட மடவல வீதி 2018 யூலை மாதம் முடிவுறுத்த வேண்டியதுடன் 2018 ஆம் ஆண்டில் ரூபா668,925செலவிடப்பட்டிருந்தது. எனினும்,ஒப்பந்தம் இடையில் நிறுத்தப்பட்டதன் காரணமாக நிறுவனத்துக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 429,038,712ஆக இருந்தது. | செயற்றிட்டத்திற்கு ஏற்புடைய எதிர்கால நடவடிக்கைகளை புதிய ஒப்பந்தகாரருடன் உடனடியாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணி கொள்ளலின்போது எடுத்த காலம், உபசெயற்றிட்டங்களை திட்டமிடுவதற்கும் அங்கீகரிப்பதற்கும் எடுத்த காலம், வழங்கப்பட்ட செயற்றிட்டங்களின் ஒப்பந்தகாரர்களின் நிதிசார் குறைபாடுகள் என்பன பலவீனமான முன்னேற்றத்துக்கு காரணங்களாகின. |

## 3.8 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

அமைச்சுக்கு ஏற்புடையதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியிருந்த மற்றும் தொடர்நடவடிக்கை முடிவுறாத பந்திகள் பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| வருடம் | பந்தி இலக்கம் | |
| 2016 | එච්යූඩී/බී/එම්සීයූඩීපී/04/16/03 இன்3.4 பந்தி | கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்ட முகவர் நிறுவனங்களுக்கும் செயற்றிட்ட முகாமைத்துவ கூறுக்கும் இருநிலைஅடிப்படையிலும் பகுதிநேர அடிப்படையிலும் சேவையாற்றும் அலுவலர்களுக்கு சம்பளம் வழங்கும்போது அவர்கள்வகிக்கும் பதவிக்குரிய அடிப்படை சம்பளத்தின்படி கணிப்பிட்டு செயற்றிட்டத்தில் சேவையாற்றுவதற்கான படிகள் செலுத்துவதற்குப் பதிலாக அவர்களுக்கு உரித்தற்ற நூற்றுக்கு 15 மற்றும் நூற்றுக்கு 5 விசேட படிகளையும் கணிப்பிட்டு சம்பளம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செலுத்திய ரூபா 10.83 மில்லியன் சம்பளத்தை மீள அறவிட்டுக் கொள்வதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2017 | එච්යූඩී/බී/එම්සීයූඩීපී/04/17/04 இன்3.5(அ) பந்தி | மோதற புதிய சுரங்க நீர் வழி செயற்றிட்டத்தின் நிருமாண வேலைகளை இலகுபடுத்துவதற்கும் செயற்றிட்டம் பொருட்டு உபகரணங்களை வைத்துக்கொள்வதற்கும் 2017 ஆகஸ்ட் மாதம் முதல் 2018 மே மாதம் வரையிலான காலப்பகுதி பொருட்டு 01 ஏக்கர் 01 றூட் 20 பேர்ச்சஸ் காணி மாதாந்தம் ரூபா 1,100,000 வாடகைக்கு 10 மாதங்கள் பொருட்டு ரூபா 11 மில்லியன் தொகைக்கு பெறப்பட்டிருப்பினும் குறித்த காலப்பகுதினுள் காணி எதற்கும் பயன்படுத்தப்படாமையினால் உறப்பட்ட பயனற்ற செலவினை மீண்டும் அறவிடுதல் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன்,2018 யூன் மாதத்திலேயே குறித்த செயற்றிட்டத்தின் நிருமாண வேலைகள்ஆரம்பிக்கப்பட்டதென அவதானிக்கப்பட்டது. |
| 2015 | එච්යූඩී/බී/එම්එම්ඩබ්ලිව්/ඩී/2015/08 இன் 3.11(ஈ) பந்தி | 2016 மார்ச்09ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின்2(iii),(iv)பந்திகளுக்கு முரணாக,முன்னாள் மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி),தமது உத்தியோகபூர்வ வாகனம் பொருட்டு எரிபொருள் படியை சம்பளத்துடன் சேர்த்து பெற்றுக்கொண்டிருக்கும்போதே, மேலும் இரு செயற்றிட்டங்களிலிருந்து சுற்றறிக்கைகளுக்கு முரணாக பெற்றுக் கொண்டிருந்த எரிபொருள்களின் கிரயமான ரூபா 465,080 தொகையை உரிய அலுவலரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2016 | එච්යුඩි/බි/එම්සියුඩිපි2016/ඊ07 | ஒப்பந்த அடிப்படையில் செயற்றிட்டம் பொருட்டு குறுகிய கால சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர் ஒருவருக்கு பட்டப்பின்/ டிப்ளோமா பின்பற்றுவதற்கு பாடநெறிக் |

கட்டணம், செயற்றிட்டம் பொருட்டு திறைசேரியினால் வழங்கப்படும் நிதியேற்பாட்டினை பயன்படுத்தி கொடுப்பனவு செய்ய முடியாதபோதிலும், கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பெறுகை சிறப்பறிஞராக சேவையாற்றிய அலுவலருக்கு பட்டப்பின் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக தவறாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 150,000 தொகையை மீள அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு 2017 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் முதல் வாடகை அடிப்படையில் 05 வாகனங்கள் பெறப்பட்டிருந்ததுடன், குறித்த வாகனங்கள் பொருட்டு மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 12,614,391 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களில் பெரும்பாலானவை மாதாந்த ஓட்ட தூரம் 1000 கிலோமீற்றரை விட குறைவாக காணப்பட்டதுடன் அவற்றில் 02 வாகனங்கள் மாதிரி சோதனைக்கு உட்படுத்தி பல மாத ஓட்ட தூரம் 500 கிலோமீற்றரை விட குறைவான தூரம் ஓடியிருந்தது. | செயற்றிட்டத்திற்கு சொந்தமான வாகனங்களை பயனுறு விதத்தில் பயன்படுத்தி வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுப் கொள்வதற்காக உறப்படும் செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | பதில் வழங்கப்படவில்லை |
| (ஆ) | செயற்றிட்டத்தின் பல உயர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் செயற்றிட்டப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஆலோசகர்கள் முறையான அங்கீகாரமின்றி வெளியிலிருந்து ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அங்கு சுற்றாடல், சமூக, தொடர்பாடல், ஒப்பந்தங்கள் மற்றும் கணிய அளவையியல் போன்ற பாகங்கள் பொருட்டு ரூபா 100,216,739 ஆலோசகர் கட்டணங்களாக 2018 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் செலுத்தியிருந்ததுடன் பொறியியல் ஆலோசகர்கள் பொருட்டு 2017,2018 | | |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளில் ரூபா 53,962,909 செலுத்தியிருந்தது. இந்த ஆலோசகர்கள் பொருட்டு வருடாந்த செயலாற்றல் மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் செயற்றிட்டக் காலப்பகுதி முடிவடையும் வரையில் சேவைகளை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் ஆலோசகர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2015 இன் பந்தி 10 பிரகாரம் அங்கீகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டிருந்தது. | | |
| **(இ)** | தந்திரோபாய நகர அபிவிருத்தி செயற்றிட்டம்<br>----------------------------------------- | | |
| (i) | காலி, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் நகர அபிவிருத்தி பொருட்டு முறையே ரூபா 3700 மில்லியன் மற்றும் ரூபா 1400 மில்லியன் நிதி ஏற்பாடு செய்திருப்பினும் ரூபா 2386 மில்லியன் மற்றும் ரூபா 313 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தன. அது முறையே நூற்றுக்கு 36 மற்றும் நூற்றுக்கு 78 ஆக இருந்தன. மேலும், மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 796.43 மில்லியன் ஆன கண்டி தர்மாசோக வீதி நிருமாண ஒப்பந்தத்தின் நிதிசார், பௌதிக செயலாற்றல் முறையே நூற்றுக்கு 50 மற்றும் நூற்றுக்கு 43 ஆக இருந்தன. | செயற்றிட்டத்தை செயற்படுத்தும் ஆற்றல் இருந்தால் மாத்திரம் நிதியை ஏற்பாடு செய்து கொள்ளுதல் வேண்டும் என. | காலி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி இரு செயற்றிட்டங்களில் காணி கொள்ளல் பொருட்டு அதிக காலம் எடுத்தமையினால் திட்டமிடப்பட்ட காலத்தினுள் அளிக்க முடியாமை மற்றும் யாழ்ப்பாணம் நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தில் நிதி இல்லாமை. |
| **(ii)** | செயற்றிட்டத்தின் வேலைகளை உரிய காலப்பகுதியினுள் முடிவுறுத்துவதற்கு தவறியமை மேல் கண்டி பல்பணி போக்குவரத்து முடிவிடத்தை நிருமாணிப்பதற்கு சருவதேச அபிவிருத்தி நிறுவனம் வழங்க வேண்டியிருந்த ரூபா 9316.6 மில்லியன் தொகை இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிருமாணத்துக்கு ரூபா 156.81 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | தாமதக் கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | மொத்த தாமதக் கட்டணமான ரூபா 11 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** | ரூபா 240.84 மில்லியன் துனுமடலாவ நீர் சுத்திகரிப்பு செயற்றிட்டத்தின் வேலைகள் 2017 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படவிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் அதன் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 90 ஆக இருந்ததுடன் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாமதக் கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஈ) | கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்றிட்டம்<br>---------------------------------------------- | | |
| (i) | பாகம் I கீழ் வெள்ளம் மற்றும் வடிகால் முகாமைத்துவம் (Flood and Drainage Management) கீழ் ரூபா 17,905 மில்லியன் ஆன 18 ஒப்பந்தங்கள் மேற்கொள்ள வேண்டிய போதிலும், அந்நடவடிக்கைகளை மீளாய்வாண்டில் செய்து இருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களை கூடிய விரைவில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | பதில் வழங்கப்படவில்லை. |
| (ii) | 03 உப செயற்றிட்டங்களில் எவ்வித செயலாற்றலும் இடம்பெறவில்லை என்பதுடன் 05 செயற்றிட்டங்களின் செயலாற்றல் நூற்றுக்கு 50 க்கும் குறைந்த மட்டத்தில் நிலவியது. 34 உப செயற்றிட்டங்களின் வேலைகளை முடிவுறுத்துவதற்கு 1 முதல் 10 வரையான கால தாமதத்துடன் முடிவுறுத்தி இருந்த போதிலும் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களை கூடிய விரைவில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | பதில் வழங்கப்படவில்லை. |
| (iii) | செயற்றிட்டத்துக்கு ஏற்புடைய உப செயற்றிட்டங்களின் பெறுகை நடவடிக்கை பொருட்டு 10 மாதங்கள் மற்றும் அதற்கு மேலான காலம் கடந்த போதிலும், அது செயற்றிட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றல் குறைவு மீது நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது. | செயற்றிட்டங்களுக்கு ஏற்புடைய பெறுகை நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | - -அதே - - |
| (iv) | செயற்றிட்டம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுறுத்தியிருந்த அத்துடன் மேலும் முடிவுறுத்தப்படவிருந்த 56 உப செயற்றிட்டங்கள் காணப்பட்டதுடன் அவற்றுள் 11 உப | செயற்றிட்டங்களை கூடிய விரைவில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | - -அதே - - |

| | | | |
|---|---|---|---|
| | செயற்றிட்டங்களுக்கு ஏற்புடையதாக செயற்றிட்டங்களை முடிவுறுத்த வேண்டிய திகதிக்கும், ஒப்பந்தகாரர் செயற்றிட்டத்தை முடிவுறுத்தி செயற்றிட்ட முகாமைத்துவ கூறுக்கு ஒப்படைத்த திகதிக்கும் இடையில் இனங்காணப்பட்ட தாமதக் காலம் 01 முதல் 02 ½ வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | | |
| (v) | இலங்கை மத்திய வங்கியில் பேணப்படும் விசேட டொலர் கணக்கில் 2018 சனவரி 01 இல் ரூபா 647.35 மில்லியன்களுக்கு சமமான ஐ.அ.டொலர் 4.23 மில்லியன் மீதி காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக, ரூபா 2,939.46 மில்லியன்களுக்கு சமமான ஐ.அ.டொலர் 18.80 மில்லியன் மீளாய்வாண்டினுள் திரும்ப பெறப்பட்டிருந்தது. ஆகையினால், செயற்றிட்டத்தின் பணிகள் பொருட்டான நிதித் தேவைப்பாடு பற்றிய பலவீனமான எதிர்வுகூறல் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் ரூபா 1,799.21 மில்லியன்களுக்கு சமமான ஐ.அ.டொலர் 9.84 மில்லியன் விசேட டொலர் கணக்கில் மிகையாக காணப்பட்டது. | செயற்றிட்டம் பொருட்டான நிதித் தேவைப்பாடு பற்றிய எதிர்வுகூறல்களை சரியாக செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என. | 2018 திசெம்பர் 31 இல் 9.84 அ.டொலர் சேர்வதற்கான அடிப்படைக் காரணம யாதெனில், 2018 ஆம் ஆண்டின் 03ம் 04ம் காலாண்டுகளில் இடம்பெற்ற பலவீனமான முன்னேற்றமேயாகும். |
| (உ) | பாரிய கொழும்பு வெள்ள கட்டுப்பாட்டு செயற்றிட்டத்தின் கீழ் தியவன்னா ஓயாவை விஸ்தரிப்பதற்காக எடுத்த காணிகள் பொருட்டு செலுத்த வேண்டிய நட்டஈடுகளை மதிப்பீடு செய்தல் அத்துடன் நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை உடனடியாக செலுத்துவதற்கான படிநிலை எதுவும் அமைச்சினால் எடுக்கப்படாமையினால் ஆ.வ.கொ. 519 இன் 01ம் 02ம் இலக்க காணித்துண்டுகள் பொருட்டு நட்டஈடு செலுத்துதல் தாமதமாகியமையினால் தனியார் கம்பனி ஒன்று முதலீட்டு பிணக்குகளை தீர்க்கும் சருவதேச நிலையத்துக்கு இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு வெளிநாட்டு சட்ட ஆலோசகர்களின் உதவியை பெறும் முகமாக சட்டக் | தியவன்னா ஓயாவை விஸ்தரிப்பதற்காக எடுத்த காணிகள் பொருட்டு செலுத்த வேண்டிய நட்டஈடுகளை மதிப்பீடு செய்தல் அத்துடன் நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை உடனடியாக செலுத்துவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அமைச்சினால் செலுத்த நேரிட்ட ரூபா 261,101,492 பொருளாதாரமற்ற செலவினை, தாமத்துக்கு பொறுப்புகூற வேண்டிய | 2017-01-03 திகதிய அமைச்சரவை அங்கீகாரம்மூலம் வழக்குக்கான சட்டக் கட்டணம் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்கு அமைச்சினால் மீள்நிரப்பல் செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| கட்டணம் மற்றும் அதற்காக ஆஜரான சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அலுவலர்களின் வெளிநாட்டு பயணங்கள் பொருட்டு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 261,101,492 செலவு அமைச்சுக்கு மேற்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன், எதிர்காலத்தில் மேலும் மேற்கொள்ள வேண்டிய செலவு தொடர்பில் குறிப்பாக காட்ட முடியாது என கோப்புகளின்படி உறுதியாகிறது. | அலுவலர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்களை அடைதல்

-----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் பிரகாரம் 2015-2030 காலத்தினுள் அடைய வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை செயற்படுத்துவதற்கு 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின்படி அனைத்து அரசாங்க நிறுவனங்களும் கட்டுப்பட்டுள்ள போதிலும், அமைச்சு ஊக்குவிப்பு வருடம் பொருட்டு நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு, அதற்கமைய, இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை அளத்தல், ஒழுங்குபடுத்துவதற்கான குறிகாட்டிகளை இனங்காணுதல், அடிப்படை தரவுகளை இனங்காணுதல் மற்றும் வருடாந்த இலக்குகளை இனங்காணுதலோ மேற்கொண்டிருக்கவில்லை என்பதுடன் அமைச்சின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றும் விதங்களைக் காட்டும் அதன் செயல் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு, அதற்கமைய, இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை அளத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான குறிகாட்டிகளை இனங்காணுதல், அடிப்படை தரவுகளை இனங்காணுதல் மற்றும் வருடாந்த இலக்குகளை இனங்காணுவதற்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றும் விதங்களைக் காட்டும் செயல் திட்டமும் தயாரிக்கப்படல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |